## அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிட –

# சுயமரியாதையைப் பாதுகாத்திட மனித உரிமைகள் நாளில் உறுதி ஏற்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – உலக மனித உரிமைகள் நாள் செய்தி!

**சென்னை. டிச.11–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "உலக மனித உரிமைகள் நாளை" யொட்டி விடுத்த செய்தியில், "அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிட, சுயமரியாதையைப் பாதுகாத்திட இந்த மனித உரிமைகள் நாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக மனித உரிமைகள் நாள் செய்தி வருமாறு:-

'ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10-ஆம் தேதி, "சர்வதேச மனித உரிமைகள் நாள்" கொண்டாடப்படுகிறது. சாதி, மதம், இனம், நிறம், பாலினம், வயது அல்லது சமூகப் பின்னணியைப் பொருட்படுத்தாமல், நம் ஒவ்வொருவருக்கும் சொந்தமான உலகளாவிய உரிமைகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் இது. இந்த உரிமைகளில் கருத்துச் சுதந்திரம், சட்டத்தின் முன் சமத்துவம், தடையற்ற கல்வி வாய்ப்புகள் மற்றும் மிக முக்கியமாக, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்கான உரிமை ஆகியவை அடங்கும்.

தனி மனித ஒழுக்கத்தைப் போற்றும் ஒரு நாட்டில் ஜனநாயகம் மேம்படவும், நீதியை சமமாக நிறுவவும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அவசியம். அனைத்து மனிதர்களின் உரிமைகளையும் மதித்து, பிறப்பாலும், தொழிலாலும் எழும் வேறுபாடுகளைக் களைந்து, ஏற்றத்தாழ்வு இன்றி, கல்வி முதல் அனைத்து அடிப்படை வசதிகளையும் அனைவரும் பெற்று மகிழும் நாள் என்று வருகிறதோ, அன்றுதான் இதுபோன்ற நாட்களின் பெருமையும் உயரும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எல்லாத் தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம். உலகில் உள்ள எல்லா மனிதர்களும் சமமானவர்களே. எல்லாருக்கும் சம உரிமை உண்டு. மற்றவர்களிடம் இருந்து நாம் என்ன உரிமையை எதிர்பார்க்கிறோமோ, அதே உரிமையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும்.

'1948-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது. மனிதனின் கௌரவத்தையும், அவனின் பிரிக்க முடியாத உரிமைகளையும் அறிந்து, ஏற்றுக்கொள்வதே அவனுக்கு அளிக்கும் சுதந்திரம், நீதி, சமாதானத்தின் அடித்தளம் என்று அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் முன்னுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், மக்கள் சுதந்திரத்தை முழு அளவில் அனுபவிப்பதைத் தடுக்கும் பல தடைகள் அகற்றப்பட்டுள்ளன; பல நாடுகளில் இனவெறிச் சட்டங்கள் அகற்றப்பட்டுவிட்டன; பெண்களை இரண்டாம் தர நிலைக்குத் தள்ளும் சட்டங்கள் மற்றும் சமூக நடைமுறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன; சிறுபான்மையினர் தங்கள் மத நம்பிக்கையை எந்தவித அச்ச உணர்வுமின்றி கடைபிடிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது.

மனிதர்களால் மனிதர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம் செயல்படுகின்றன. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, 17-4-1997 அன்று தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது. 1997 ஏப்ரல் திங்கள் முதல், 2025 செப்டம்பர் திங்கள் வரை இவ்வாணையத்திற்கு 2,84,687 புகார்கள் வரப்பெற்று, அவற்றில் 2,52,573 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டிற்கான மனித உரிமைகள் நாள் கருப்பொருளாக (Theme) ஐக்கிய நாடுகள் சபையானது "மனித உரிமைகள், நமது அன்றாட அத்தியாவசியங்கள்" (Human Rights, Our Everyday Essentials) என்பதை அறிவித்துள்ளது. "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற அடிப்படையில், அனைத்துத் தரப்பினருக்குமான உன்னதமான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் நமது திராவிட மாடல் அரசு, சமூகம், மதம், இனம், மொழி, நிறம், அரசியல் பாகுபாடின்றி அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்திடுவதில் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிட, சுயமரியாதையைப் பாதுகாத்திட, இந்த மனித உரிமைகள் நாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம்.

இவ்வாறு அந்தச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## தொகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையின் அடிப்படையில்

# கிணத்துக்கடவு - பொள்ளாச்சி ரயில் நிலையங்களை சேலம் மண்டலத்திற்கு மாற்றுக!

## மக்களவையில் – கே.ஈஸ்வரசாமி வலியுறுத்தல்!

கோவை, டிச. 11 –

பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையின் அடிப்படையில் கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களை சேலம் மண்டலத்திற்கு மாற்றுவது குறித்து மக்களவையில் வலியுறுத்தினார்.



கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களை பாலக்காடு மண்டலத்திலிருந்து சேலம் மண்டலத்துக்கு மாற்றுவது தொடர்பாக ஒன்றிய அரசு மனுக்கள் பெற்றுள்ளதா? பெற்றிருந்தால் அதற்கான விவரங்கள் என்ன? பெறவில்லை என்றால் அதற்கான நடவடிக்கை என்ன?

தற்போதைய மண்டல அமைப்பு கட்டமைப்பு மேம்பாட்டிலும் பயணிகள் வசதிகளிலும் தாமதத்தை ஏற்படுத்துகிறது என்பதை அரசு அறிந்திருக்கிறதா? அறிந்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

மேற்கண்ட கோரிக்கைக்கான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்வது, மேலும் தமிழ்நாடுலும் தமிழ்நாடு அரசுடன் ஆலோசனை நடத்துவது போன்றவற்றை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதா? மேற்கொண்டிருந்தால் விவரங்கள் என்ன? மேற்கொள்ளவில்லை என்றால் காரணங்கள் என்ன?

கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் பயணிகளின் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் என்ன? என்ற கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் அளித்த ரயில்வே, தகவல் & ஒளிபரப்பு மற்றும் மின்னணு & தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதிலில்,

இந்திய ரயில்வே முழுவதும் மண்டல மற்றும் பிரிவு எல்லைகள் மாற்றம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், சமூக நல அமைப்புகள், ரயில் பயனாளர்கள் போன்றோரிடமிருந்து அதிகாரப்பூர்வமாகவும், அதிகாரப்பூர்வமற்ற முறையிலும் பல்வேறு நிலைகளில் ரயில்வே வாரியம், மண்டல ரயில்வே, பிரிவு அலுவலகம் போன்ற இடங்களில் தொடர்ந்து மனுக்கள், கோரிக்கைகள், ஆலோசனைகள் பெறப்படுகின்றன.

இந்த மனுக்கள் தொடர்ச்சியாகவும், சீரற்ற முறையிலும் கிடைப்பதால் மையப்படுத்தப்பட்ட பட்டியல் பராமரிக்கப்படவில்லை. எனினும், அவை பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான மற்றும் சாத்தியமான நடவடிக்கைகள் தேவைக்கேற்ப எடுக்கப்படுகின்றன. இந்திய ரயில்வேயின் செயல்பாடுகள் மண்டலங்களாகவும் பிரிவுகளாக வும் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த பிரிவுகள் மாநிலங்கள் மற்றும் மாவட்ட எல்லைகளின் அடிப்படையில் பிரிக்கப்பட வில்லை. அவை செயல்திறன், நிர்வாக தேவைகள். பொருளாதார மற்றும் செயல்திறன் காரணிகளின் அடிப்படையில் தான் பிரிக்கப்பட்டுள்ளது.

பாலக்காடு மண்டலம் தற்போது கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி உள்ளிட்ட தனது எல்லைக்குள் உள்ள பாதைகளின் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. தற்போதைய அமைப்பு திருப்திகரமாக செயல்பட்டுவருவதால் கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களை சேலம் மண்டலத்துக்கு மாற்றும் முன்மொழிவு சாத்தியமற்றதாகவே கருதப்படுகிறது என்று பதிலளித்துள்ளார்.

மேலும் அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள பல்வேறு ரயில் நிலையங்களை நீண்ட கால வளர்ச்சி நோக்கில் மேம்படுத்தபடுகிறது. ரயில்வே நிலையங்களில், லைய அணுகல் மற்றும் சுற்றுப்புற பகுதி மேம்படுத்தல், நகரின் இரு பக்கங்களுடனும் ஒருங்கிணைத்தல், நிலையக் கட்டிட மேம்பாடுத்துதல், காத்திருப்பு மையங்கள் கழிப்பறைகள், இருக்கைகள், குடிநீர் வசதி போன்ற பல வசதிகள் மேம்படுத்தப்படுவதாகவும், இந்தியாவில் இதுவரை 1,337 நிலையங்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் 77 நிலையங்கள் தமிழ்நாட்டில், அதில் பொள்ளாச்சி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் வடக்கு, போத்தனூர் போன்ற ரயில் நிலையங்களும் மேம்படுத்தபடுவதாக கூறினார்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே சிதம்பரம், குளித்துறை, மன்னார்குடி, போலூர், சமல்பட்டி, ஸ்ரீரங்கம், செயிண்ட் தாமஸ் மவுண்ட், திருவண்ணாமலை, விருத்தாச்சலம் போன்ற 9 ரயில் நிலையங்களில் இந்த பணி நிறைவு பெற்றுள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளார். மேலும் பொள்ளாச்சி ஜங்ஷன் புதிய நிலையக் கட்டிடம், மேடை கூரை, காத்திருப்பு மண்டபம், கழிப்பறை, முன்பதிவு அலுவலக மேம்பாடு, ஏசி காத்திருப்பு அறை, சுற்றுப்புற பகுதி, பார்க்கிங், VIP லவுஞ்ச், மாற்றுத்திறனாளி வசதிகள் அனைத்தும் முடிந்தது. இறுதி அலங்கார வேலைகள் நடைபெற்று வருகின்றன. என்றும் கோயம்புத்தூர் வடக்கு ரயில்வே நிலையத்தில் புதிய காத்திருப்பு மையம், மேடை கூரை, லிப்ட், பார்க்கிங் முடிந்தது. நிலையக் கட்டிடம் & சுற்றுப்புறம் மேம்படுத்தும் பணிகள் நடைபெறுகின்றன.

போத்தனூர் ஜங்ஷனில் காத்திருப்பு மையம் சுற்றுப்புறம், பார்க்கிங், புதிய ரிசர்வ் லவுஞ்ச், முன்பதிவு அலுவலகம், லிப்ட் ஆகியவை முடிந்தது. தளம் மேற்பரப்பு, மேடை கூரை, மேடை1 அகல விரிவாக்கம், 6 மீட்டர் மேம்பாலம் போன்ற பணி கள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் ஜங்ஷனில் மாஸ்டர் பிளானிங் நடைபெற்று வருகிறது. இது பல முறை திருத்தப்படும் செயல்முறை என்பதால் காலக்கெடுவை இப்போது அறிவிக்க முடியாது என்றும் தனது பதிலில் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

கடைசியாக நிலைய மேம்பாடு மறுவளர்ச்சி மேம்படுத்தல் என்றவை தொடர்ச்சியான செயல்முறைகள் தேவைக்கேற்ப முன்னுரிமை மற்றும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் உயர்நிலை நிலையங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தப்படுகிறது என்றார்.




பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (09.12.2025) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா (CIBF) 2026 – இன் இலச்சினையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# SIR: களத்தில் கழகத்தினர்...!




ஒரு விஷயத்தை நாம தெளிவா புரிஞ்சிக்கணும்.

ஒரு பொதுத்தேர்தலில் தி.மு.க. அல்லது அதி.மு.க. வாங்குகின்ற வாக்கு சதவிகிதம் என்பது வேறு. பொதுவாக தி.மு.க. அல்லது அதி.மு.க. வுக்கு என்று இருக்கின்ற Core Vote Bank எனப்படும்,, எந்த நிலையிலும் மாறாத தனித்த வாக்கு வங்கி என்பது வேறு.

இந்த அடிப்படையில்... தி.மு.க. வின் கோர் வோட் பேங்க் எனப்படும் தனித்த வாக்கு வங்கி கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் இருந்ததை விட தற்பொழுது ஐந்திலிருந்து ஏழு சதவிகிதம் நிச்சயமாக உயர்ந்திருக்கின்றது.

அதே சமயம் அ.தி.மு.க. வின் தனித்த வாக்கு வங்கியானது கடந்த 2021 சட்டமன்ற தேர்தலின் போது இருந்ததைக் காட்டிலும் சர்வ நிச்சயமாக 8 லிருந்து 10 சதவிகிதம் குறைந்து போயிருக்கின்றது.

மேற்சொன்ன இரண்டு கருத்துக்களுக்குமே நாம் மிகச் சரியான காரணங்களை எடுத்துக் கூற இயலும். இதை கூடுதல் தெளிவுடன் பார்ப்பதற்கு முன்பாக ஒரு டீஸர் போல பார்த்தோமானால், 2016 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அந்த தேர்தலில் வென்ற அ.தி.மு.க.வுக்கும் வெற்றிவாய்ப்பை இழந்த தி.மு.க.வுக்குமான வாக்கு வித்தியாசம் வெறும் 1.03 சதவிகிதம் மட்டுமே.

அதே சமயம் கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறும் பொழுது தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்குமான வாக்கு வித்தியாசம் கிட்டத்தட்ட 6.40 சதவிகிதம்.

அதாவது 2021க்கு ஐந்து ஆண்டுகள் முன்பாக, அதாவது 2016இல் அ.தி.மு.க. வாக்குவங்கியை விட 1.03 சதவிகிதம் குறைவான வாக்கு வங்கியைக் கொண்டிருந்த தி.மு.க. .... அடுத்த ஐந்து ஆண்டுகளில் (2021இல்) அந்த 1.03 சதவிகிதத்தை சமன் செய்ததோடு மட்டுமல்லாமல் கூடுதலாம 6.40 சதவிகிதம் வாக்குகளையும் பெற்றது.

அதாவது ஐந்து ஆண்டுகளில் ஆகக் கூடுதலாக 1.03 + 6.40 = 7.43 சதவிகிதம் வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றிருக்கின்றது..! இது தான் அளவுகோல். 2016 லிருந்து 2021க்குள் அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி 7.43 சதவிகிதம் குறைந்திருக்கின்றது. அதே சமயம் தி.மு.க.வின் வாக்கு வங்கி 7.43 சதவிகிதம் அதிகரித்திருக்கின்றது..!

இது யாராலும் மறுக்க இயலாத. தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டிருக்கும் புள்ளி விவரம்.

இப்பொழுது உள்ள நான்கரை அல்லது ஐந்து ஆண்டுகள் என்றே வைத்துக்கொள்வோம். அதாவது 2021 இல் இருந்து 2026 வரையிலான காலக்கட்டத்தில்.

தி.மு.க.வின் கைவசம் ஒரு ஆட்சி அதிகாரம் இருக்கின்றது. அதை வைத்துக் கொண்டு, இந்த நான்கரை ஆண்டுகளில் அதிலும் கொரோனாவில் சிக்கிய முதல் ஓராண்டினைக் கழித்து விட்டுப் பார்த்தாலும், எண்ணற்ற என்று சொல்வதைக் காட்டிலும் அளப்பறிய மக்கள் நலத் திட்டங்களை செய்து முடித்திருக்கிறது தி.மு.க.வின் திராவிட மாடல் அரசு.

**சௌமியன் வைத்தியநாதன்**
மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர்
தி.மு.க.



வெளியில் பொதுவான அரசியல் ஆர்வம் இல்லாத மக்களுக்குத் தெரிந்த இருபது இருபத்தைந்து திட்டங்களைக் கடந்து, நூற்றுக்கணக்கான மக்கள் நலத் திட்டங்கள் நேரடியாக... நேரடியாக, சிறு சிறு குழுக்கள், மிகச் சிறு இனங்கள், சிறு சிறு சமூகங்கள்

புரியும்படியாக சில உதாரணங்களைச் சொல்ல வேண்டுமானால்... மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் / நம்பிகள், மலைவாழ் பழங்குடியினர், சிறு குறு தொழில் முனைவோர்கள் இப்படியாக சர்ஜிகல் ஸ்டிரைக் போன்று தமிழ்நாட்டின் கிட்டத்தட்ட அனைத்து வகைப்படுத்தலுக்கும் உள்ளான மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு பார்த்துப் பார்த்து. அவரவர் தேவைகளுக்கு ஏற்ப நலத்திட்டங்களும், தொலைநோக்கு வாழ்வாதாரத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதில் இன்னும் ஒரு மிக முக்கிய மாற்றமாக தி.மு.க. ஆட்சி நடந்துகொண்டிருந்தாலும், தி.மு.க.வினர் எவருக்கும்அரசுஅலுவலகங்களிலோ,காவல்நிலையங்களிலோ எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்று எதிர்க்கட்சிகள் எள்ளி நகையாடுவதும் அதை பொதுமக்கள் அர்த்தமுடன் உற்று நோக்கி, அரசு இயந்திரத்திற்கும் தங்களுக்குமான நல்ல உறவை ரசித்துக் கொண்டிருப்பதும் கூட, இந்த திராவிட மாடல் ஆட்சியின் புதுமை தான்.

இது ஆட்சியாளர்களுக்கு இயல்பாகவே கிடைக்கக் கூடிய ஆண்டி இன்கம்பன்ஸி எனப்படும் ஆட்சிக்கு எதிரான மனநிலையை வெகுவாக குறைக்க உதவுகின்றது என்ற எல்லைகளை எல்லாம் கடந்து, ப்ரோ இன்கம்பன்ஸி எனப்படும் ஆட்சிக்கு ஆதரவான மனநிலை மக்களிடம் ஏற்பட்டிருக்கின்றது என்பது தான் கள யதார்த்தம்.

இதெல்லாம் ஆட்சி ரீதியாக மக்களைக் கவர்ந்து, வாக்குவங்கியை தக்க வைத்துக் கொள்ளும் நடைமுறைகள் என்றாலும்...

இயக்க ரீதியாக திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த ஏழு ஆண்டுகளாக இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கடந்த நான்கு ஆண்டுகளாக காட்டியிருக்கின்ற புலிப்பாய்ச்சல் அபாரமானது!

ஒரு பக்கம் 2016இல் ஜெயலலிதா மறைந்த பொழுது அ.தி.மு.க. எப்படியிருந்ததோ அதாவது அதன் உட்கட்டமைப்புகள் எந்த எல்லை வரை இருந்ததோ அதைத் தாண்டி இன்று வரையிலும் அதன் எல்லை விரிவாக்கம் செய்யப்படவே இல்லை.

புரியும்படியகச் சொல்ல வேண்டும் என்றால் அதே காலக் கட்டத்தில் தி.மு.க.வின் உட்கட்டமைப்பு எல்லையும் அ.தி.மு.க.வின் உட்கட்டமைப்பும் ஒரே எல்லையில் இருந்து கொண்டிருந்த நிலையில்...

கடந்த 7 ஆண்டுகளில் தி.மு.க.வின் உட்கட்டமைப்பு 100 சதவிகிதம் கூடுதலாக்கப்பட்டிருக்கின்றது. பத்துக்கும் மேற்பட்ட புதிய சார்பு அணிகள் அவற்றுக்கான ஒன்றியம், நகரம், பேரூர் வரையிலான நிர்வாகிகள் மிகப் பலப்படுத்தப்பட்டிருக்கும் இளைஞரணி அந்த அணிக்கோ கழகத்தின் அடி வேரான கிளைக்கழகங்கள் வரையிலுமான பத்து லட்சத்திற்கும் கூடுதலான நிர்வாகிகள் தாய்க் கழகத்திலோ, இரட்டிப்பு அல்லது மும்மடங்காக மாற்றி கட்டமைக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்ட மற்றும் கிளைக் கழகங்கள் அதற்கான நிர்வாகிகள்!

65 ஆயிரம் பூத்துக்களுக்கும், தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாகநிலை முகவர்கள், ஒவ்வொரு பூத்துக்கும் பத்துப் பத்து பாக நிலை குழுவினர். ஒவ்வொரு பூத்துக்கும் இளைஞரணி, தகவல் தொழில் நுட்ப அணி, மகளிர் அணி நிர்வாகிகள் தவிர்த்து. உச்சக் கட்டமாக ஒவ்வொரு பூத்துக்கும் பாகநிலை டிஜிட்டல் முகவர்கள் என்று தமிழ்நாட்டில் உள்ள 65 ஆயிரம் பூத்துக்களுக்கும் ஒன்பது லட்சத்தி எழுபத்தைந்தாயிரம் கழக செயல்வீரகள், சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றனர். இந்த அத்தனை பேருமே குறைந்த பட்சமாக கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 15 முறையாவது பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கின்றனர். அதன் காரணமாகவே, SIR நடவடிக்கைகளை திராவிட முன்னேற்றக் கழகம் வெகு நேர்த்தியாக கையாண்டது மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த தமிழ்நாட்டு வாக்காளர்களுக்கும் தி.மு.க. ழகத்தின்மீதானஒருபுதுநம்பிக்கையைவிதைத்திருக்கின்றது.

இவர்கள் தான் நான்கு மாதங்கள் முன்பாக ஒரு 45 நாட்களுக்கான 'ஓரணியில் தமிழ்நாடு' எனும் திட்டத்தில் ஒவ்வொரு வீடாகச் சென்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அந்த சாதனைகளில் எத்தனை அந்த குடும்பத்தின் பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றது என்பதை அவர்கள் வாயிலாகவே கேட்டறிந்து, அதை டிஜிட்டலில் பதிவு செய்து அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைய விரும்புகின்றார்களா என்று கேட்டு அவர்கள் விருப்பம் தெரிவித்தால், அவர்களை அதே டிஜிட்டல் ஆப் மூலமாக இணைத்து....

இன்றைக்கு தமிழ்நாடில் இருக்கின்ற 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் சராசரியாக 46 சதவிகித வாக்காளர்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களாக இணைத்திருக்கின்றார்கள்.

இதே ஒன்பதே முக்கால் லட்சம் பூத் நிர்வாகிகள் தான், மற்ற கழக நிர்வாகிகளோடு இணைந்து இதே மக்களுக்கு ஒவ்வொரு பகுதியிலும் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் என்ற வீடு தேடி வரும் அரசு நிர்வாகம் என்ற முன்னெடுப்பில் உறுதுணையாக நின்று அவர்களுக்கு அரசின் சார்பாக கிடைக்க வேண்டிய தேவைகள் அனைத்தையும் அவர்கள் வீட்டிற்கு அருகாமையிலேயே நிறைவேற்றித் தந்தவர்கள்..!

இவர்கள் தான் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் இதே மக்களுக்கு ஆகச் சிறந்த உயர்வான மருத்துவ சிகிச்சைகளை சாத்தியமாக்கித் தந்துள்ளனர்.

இவர்கள் தான் இதே மக்களில் மூத்த குடிமக்களுக்கு தாயுமானவர் திட்டத்தின் கீழ் வீடு தேடி ரேஷன் பொருட்களைக் கொடுக்க தேவையான ஒருங்கிணைப்புகளைச் செய்து கொடுத்தனர்...

இதேப் போல் இன்னும் நிறைய.. இவர்கள்.. அதாவது தி.மு.க.வினர் மக்களோடு, மக்களுடனேயே பயணிக்கிறார்கள்... வாழ்கிறார்கள்... உச்சக் கட்டமாக அவர்கள் வாக்குகளையும் கூட உறுதியுடன் மீட்டுத் தந்து கொண்டிருக்கின்றனர்...!

அதனால் தான் சொல்கிறேன்... மக்களுக்கு தி.மு.க. வின் மீதும் தி.மு.க.வினர் மீதும்... தி.மு.க. தலைவரும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் மீதும் ஒரு புது நம்பிக்கை வந்திருக்கின்றது!

அதே சமயம்... 2016இல் இருந்து அ.தி.மு.க. இப்படியாக எந்த கட்சி உட்கட்டமைப்பையும் பலப்படுத்தவில்லை என்பதோடு இந்த SIR விவகாரத்தில் கூட அவர்கள் மக்களோடு இல்லை என்பதும் அ.தி.மு.க.வின் நிர்வாகிகளில் பலரே தங்கள் வாக்குகளைச் சேர்த்துத் தரச்சொல்லி தி.மு.க. முகவர்களிடம் வந்து கேட்பதும் தான் களத்தில் நடக்கின்ற சாதாரன நிகழ்வுகள். பொது மக்கள் இதை உற்று கவனிக்கின்றனர்.

அ.தி.மு.க.வோ பலப்படுத்தவில்லை என்பதோடு... கடந்த 9 ஆண்டுகளில் பல்வேறு முன்னணி தலைவர்களை இழந்து நின்று கொண்டிருக்கின்றது. ஒரு அ.தி.மு.க. களப்பணியாளர், SIR முகாமில் வந்து இப்படிக் குமுறுகின்றார்... "பா.ஜ.க.வுக்கு பல்லக்குத் தூக்குறதுக்காக, எங்களை மக்களிடம் செல்லவிடாமல் தடுத்து, மக்களோடு சேர்ந்து நாங்களும் உங்களிடம் உதவி கேட்டு நிற்கும் நிலைக்கு எங்கள் தலைமை எங்களைத் தள்ளி விட்டது."

அ.தி.மு.க. என்ற கட்சி கடந்த 9 ஒன்பது ஆண்டுகளில் செல்லரித்துப் போய் நிற்கின்றது. வெளிக்கூடு தான் தெரிகிறது. உள்ளே உள்ள பாகங்கள் அனைத்தும் அரித்துப் போய் விட்டது. அதை புதிதாக உருவாகியிருக்கும் ஒரு நடிகர் கட்சி கரையானாக மாறி தின்று கொழுக்க முற்படுகிறது.

கரையான்கள் உளுத்துப் போன மரக்கட்டைகளை அரிக்கலாம். ஆனால் எஃகுக் கோட்டையாம் தி.மு.க.வை அதன் நீண்ட கால முதன்மை தளகர்த்தரும் இன்றைய தலைவருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் காத்து நிற்கின்ற நிலையில் கரையான்கள் அந்த எஃகுக் கோட்டையின் கதவிடுக்கில் சிக்கி நசுங்கிச் சாகும்!